IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.98/2021
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனிசாமி | Caste | : | |
| Father Name | : | மாரிமுத்து | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of August, 2024.

Cross Continuation:

1. சின்னம்மாளின் வாரிசுகள் தான் மாரிமுத்து, கோவிந்தன், மற்றும் அர்ஜூனன் என்பதை காட்ட சின்னம்மாளின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மாரிமுத்துவின் வாரிசுகள் 1 முதல் 6 வாதிகள் தான் என்பதை காட்ட அவரின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

2. மேற்படி சின்னம்மாள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வேலூரில் நிறைவேற்றுதல் மனு எண்.343/1966 தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் வழக்கு சொத்தை ஆவண எண்.2332/1966–ன் கீழ் கிரையம் பெற்றுள்ளார் என்று வழக்குரையிலும் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறியுள்ள நிலையில் அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

3. அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் மேற்படி நீதிமன்றத்தில் நிறைவேற்றுகை மனு எண்.1079/1966–ல் தாக்கல் செய்து நீதிமன்றம்

மூலம் சின்னம்மாளிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்று வழக்குரையிலும் எனது முதல் விசாரணையிலும் கூறியுள்ள நிலையில் அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

4. மேலும் நிறைவேற்றுகை மனு எண்.1264/1966–ல் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 13.02.1967 அன்று நீதிமன்றத்தால் சொத்தின் மீது பற்றுகை உத்தரவு போடப்பட்டு நிரந்தமாக்கப்பட்டுள்ளது என்று வழக்குரையிலும் எனது முதல் விசாரணையிலும் கூறியுள்ள நிலையில் அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

5. இவ்வழக்கை நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்துள்ளோம் என்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி எங்கள் பாட்டி சின்னம்மாளிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது சரியல்ல. அவ்வாறு கிரையம் பெற்று பிரதிவாதி மாரிமுத்தம்மாள் கடந்த 10 வருடங்களுக்கு முன்பே வழக்கு சொத்துக்களை பிரித்து பல நபரிடம் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும் கிரையம் பெற்றுள்ள நபர்கள் தான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றும் சொன்னால் சரியல்ல.

6. இவ்வழக்கில் வழக்கு சொத்திற்குரிய சொத்து வில்லங்க சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கும் பட்சத்தில் உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதால் அதை தாக்கல் செய்யாமல் இவ்வழக்கை

போட்டுள்ளோம் என்றால் வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்திற்குரிய பட்டா நகலை இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். முன்றாம் நபர்கள் தான் வழக்கு சொத்தில் இருந்து வருகிறார்கள் என்று நன்கு தெரிந்தே வழக்கு சொத்திற்குரிய பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. சின்னம்மாளின் வாரிசுகள் 1 முதல் 10 வாதிகள் தான் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் மேற்படி சின்னம்மாளுக்கு வாதிகள் அனைவரும் வாரிசுகளே இல்லை என்றும், வாதிகள் அனைவரும் அவருக்கு முன்றாம் தரப்பினர்கள் என்றும் வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை போட்டுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எனவே, இவ்வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI